**21.09.2024**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்.

OS.147 /2022

**வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தேன்மொழி | | |
| க/பெ | அறிவழகன் | மதம் | |
| கிராமம் | கொளப்பாக்கம் | தொழில் | |
| தாலுக்கா | பண்ருட்டி | வயது | 51/2024 |
| மாவட்டம் | கடலூர் | தேதி | |

இன்று சாட்சி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன், நான் சொன்ன விபரம் அடிப்படையில் நிரூபணவாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. நான் படித்துப்பார்த்தேன் விபரம் சரியாக உள்ளது. கையொப்பம் போட்டேன். 03.09.1976ந் தேதியில் வாதி தகப்பனார் மோகன் தாஸ் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரம் கணினி நகல் வா.சா.ஆ.1 ஆகும். 13.04.1978ந் தேதியில் வாதி தகப்பனார் ஜெயராமன் வசம் இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரம் கணினி நகல் வாச.ா.ஆ.2 ஆகும். 05.02.1980ல் தேதியில் வாதியின் தகப்பனார் ரத்தினாம்பாள் வகையறா வசம் இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரம் கணினி நகல் வா.சா.ஆ.3 ஆகும். 05.02.1980ந் தேதியில் வாதியின் தகப்பனார் ரங்கநாதன் வகையறா வசம் இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரம் கணினி நகல் வா.சா.ஆ. 4 ஆகும். 17.11.1981ந் தேதியில் வாதியின் தகப்பனார் கனகராஜி கவுண்டர் வகையறா வசம் இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரம் கணினி நகல் வா.சா.ஆ. 5 ஆகும். 29.12.1985ந் தேதியில் வாதியின் தகப்பனார் கோதைநாயகி வசம் இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரம் கணினி நகல் வா.சா.ஆ.6 ஆகும். 09.01.1986ந்

தேதியில் வாதியின் தகப்பனார் 3ம் பிரதிவாதியின் பெயரில் அம்மனியம்மாள் வகையறா வசம் இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரம் கணினி நகல் வா.சா.ஆ. 7 ஆகும். 12.11.2008ந் தேதியில் 3ம் பிரதிவாதி ரத்தினம்பாள் சேகர் ஆகியோர்கள் வசம் இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 8 ஆகும். 24.12.2008ந் தேதியில் 3ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதியின் பெயரில் உஷாராணி வகையறா வசம் இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரம் கணினி நகல் வா.சா.ஆ. 9 ஆகும். தாவா சொத்துக்களுக்கான பட்டா கணினி நகல் வா.சா.ஆ.10 ஆகும். 05.05.2002ந் தேதியில் வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ. 11 ஆகும். அதை 1, 3, 4, 6, 7ம் பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டைகள் முறையே வா.சா.ஆ. 12 முதல் 16 வரை ஆகும்.

**மேற்கொண்டு ஆவணங்களை குறியீடு செய்வதற்காக கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**